# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை –25

## மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 1 (HG10)

## ஜூலை – ஆகஸ்ட் 2025

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. இராமலிங்கர் இறைவனை எவ்வாறு புகழ்கிறார்?
2. முடியரசனாருக்குக் கவியரசு பட்டம் சூட்டியவர் யார்?
3. பண்புடையாளர் நட்பு எதனைப் போன்றது என்கிறார் திருவள்ளுவர் ?
4. படித்தவன் எப்படி வாழ வேண்டும்?
5. 'நெடுந்தீவு' எந்த நாட்டில் உள்ளது?
6. உண்ணத் தெவிட்டாத தின்பண்டம் யாது?
7. தமிழில் இலக்கணம் எத்தனை வகைப்படும் ?
8. மரம் + வேர் = மரவேர் என்பது எவ்வகை விகாரப் புணர்ச்சி?
9. பெயர்ச்சொல் என்றால் என்ன?
10. இராமன் கண்டுபிடிப்பின் பெயர் என்ன?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?
2. வாழை மரத்தில் கிடைக்கும் பொருட்களை எழுதுக.
3. 'நஞ்சு உண்ட நாயக மூர்த்தி' என்ற பாடத்தில் இடம் பெறும் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.
4. உலகிலேயே மிகவும் பழமையான இலெமுரியா கண்டம் பற்றி எழுதுக.
5. பாரதிதாசன் குறிப்பு வரைக.
6. நாமக்,கல் கவிஞரின் நூல்கள் சிலவற்றைக் கூறுக.
7. அறிவுடையவர், அறிவில்லாதவர் நட்பு எத்தகைய தன்மையுடையன?
8. கல்வி எப்படிப்பட்ட மருந்து? அஃது உள்ளத்தை என்ன செய்யும்?
9. உறவினரிடம் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்று பழமொழி கூறுகிறது?

10. தேம்பாவணி பாடலில் இடம்பெற்றுள்ள இயேசு பெருமானின் மையக்கருத்தை மட்டும் எழுதுக.
11. மெய்யெழுத்துகளின் வகைகளை எழுதுக.
12. ஆய்த எழுத்து எவ்வாறு ஒலிக்கப் பெறுகிறது? அது தனித்து வருமா?
13. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
14. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. வினைச்சொல் என்றால் என்ன?

## பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன எடுத்துக்காட்டு தருக.
2. மரபுக் கவிதை மொத்தம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. கவிஞர் முடியரசனார் குறிப்பு வரைக.
4. உமறுப்புலவர் குறிப்பு வரைக.
5. நல்ல நூல்களை நாம் எவ்வாறு தேர்ந்தெடுத்து கற்க வேண்டும்?
6. உயர்திணை அஃறிணை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
7. விருந்தினரை வரவேற்ற குடும்பத் தலைவியின் முகம் எவ்வாறு இருந்தது? அவர்களுக்குப் பருக கொடுத்தது என்ன?
8. உவமை அணியின் பகுதிகள் யாவை?

## பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. புணர்ச்சி என்றால் என்ன அதனை வகைப்படுத்தி எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. நஞ்சு உண்ட நாயக மூர்த்தி பற்றி கட்டுரை வரைக.
3. காஞ்சிபுரம் கோவில் பற்றி எழுதுக.

## பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. வாழைமரம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. நட்பை குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

******